

சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான நேற்று (15.7.2023) கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவின் போது பள்ளி மாணவ, மாணவியர்களுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார்.

## டெல்லியை சூழ்ந்த வெள்ளம்!

புதுடெல்லி, ஜூலை 16 - வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இதன் காரணமாக பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தலைநகர் டெல்லியில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கனமழை கொட்டித்தீர்த்தது. மழை மேலும் தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக யமுனை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. யமுனை ஆற்றின் நீர் மட்டம் அபாய அளவை தாண்டியுள்ளது. இதன் காரணமாக தலைநகர் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை யமுனை ஆற்றின் நீர் மட்டம் 208.66 மீட்டராக இருந்த நிலையில் அந்த அளவு தற்போது சற்று குறைந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி ஆற்றின்நீர் மட்டம் 207.62 மீட்டராக உள்ளது.

### பொதுவுடைமை லட்சியங்களைக் கடைப்பிடிப்பதில்

## நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்குபவர்!

### சங்கரய்யா 102வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 16- சங்கரய்யா அவர்களின் 102 ஆவது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவர் 'தகைசால் தமிழர்' சங்கரய்யா அவர்களின் 102ஆவது பிறந்தநாள்!**

**பொதுவாழ்விலும் பொதுவுடைமை இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதிலும் நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கும் அவர் நலமுடன் வாழிய பல்லாண்டு!**



இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் மூலம்

## தகைசால் தமிழர் சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 16 –**

**சுதந்திரப் போராட்டத் தியாகியும் மிகச் சிறந்த பொதுவுடமைத் தலைவராகவும் திகழும் நம் மரியாதைக்குரிய சங்கரய்யா அவர்களுக்கு தமிழ்நாடு அரசு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு "தகைசால் தமிழர்" என்ற விருதினை வழங்கி கௌரவித்தது.**

இன்று 102 வது பிறந்த நாள் காணும் பெரியவர் சங்கரய்யா அவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பயின்ற பொழுது ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறையில் அடைக்கப்பட்டார். அதன் காரணமாக அவர் கல்லூரித் தேர்வினை எழுத முடியவில்லை. இந்தியா விடுதலை பெறுவதற்கு 12 மணி நேரங்களுக்கு முன்பாக தான் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதியன்று அவர் விடுதலை செய்யப்பட்டார் என்பது வரலாறு.

ஏழை எளிய மக்களுக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்தவரும் தமிழினத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவரும் ஒரு மிகச் சிறந்த சுதந்திரப் போராட்டத் தியாகியுமான சங்கரய்யா அவர்களுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும் எனப் பல்வேறு தரப்பிலும் இருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதன் அடிப்படையில், மரியாதைக்குரிய திரு. சங்கரய்யா அவர்களுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சார்பாக கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### சென்னையில் பூங்காக்களை மேம்படுத்திட - ஆய்வு மேற்கொள்ள

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிங்கப்பூர் பயணம்!

சென்னை, ஜூலை 16- வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 12.07.2023 முதல் 14.07.2023 வரை தோட்டக்கலை துறை சார்பாக சிங்கப்பூர் அரசுமுறைப் பயணத்தில் பார்வையிட்டார்.

சென்னையில் முக்கியமாக செம்மொழிப் பூங்கா, செங்காந்தள் பூங்கா, மாதவரம் பூங்கா, வண்ணாரப்பேட்டை பூங்கா போன்ற இடங்களை பயன்படுத்தவும், சிங்கப்பூர் மற்றும் மேலைநாடுகளில் உபயோகப்படுத்துகின்ற பூங்காகுகுளின் தரத்திற்கு இணையாக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையிலும் பராமரிக்கப்பட்டு வரும் பூங்காக்களை மேம்படுத்திட, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 13.07.2023 அன்று, சிங்கப்பூர், தேசிய தாவரவியல் பூங்காவானது எவ்வாறு பராமரிக்கப்படுகிறது எனவும் பூங்காவில் வளர்க்கப்படும் மரங்கள் மற்றும் இதர பூக்கள் வகையறா போன்றவைகள் குறித்து, சிங்கப்பூர் தேசிய பூங்காவின் முதுநிலை பூங்கா இயக்குநர் சூவா ஹாக் சியாங், துணை இயக்குநர் (நூலகம், பயிற்சி மற்றும் விரிவாக்கம், பாதுகாப்பு) பேராசிரியர் நூரா Bte. அப்துல் கரீம் ஆகியோர் அப்பூங்கா எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கினர்.

இதனை தொடர்ந்து தேசிய தாவரவியல் பூங்காவின் துறை அலுவலர்களுடன் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தாதேவி ஆய்வு செய்தனர்.

பின்னர் சிங்கப்பூர் மெரினா நீர்த் தேக்கத்தின் அருகில் Gardens by the Bay என்ற மற்றொரு பூங்கா வினையும், முதுநிலை இயக்குநர், பூங்கா பராமரிப்பு திரு. கேரி சூவா (Gary Chuo) உதவி முதுநிலை நிர்வாக அலுவலர் திருமதி மே யோ (May Yeo) ஆகியோர் அப்பூங்காவின் சிறப்பு அம்சங்களையும், அங்கு காட்சிப்படுத்தப்பட்ட அனைத்து பூக்களின் வகைகள், ரோஜா தோட்டம், உலகிலேயே மிகப்பெரிய செயற்கை நீர் வீழ்ச்சி அமைப்பு, செயற்கை நீர் ஊற்று போன்ற பல புதிய அம்சங்களை பார்வையிட்டு அப்பூங்கா எவ்வாறு கட்டமைக்கப்பட்டு, அதன் பயன்பாடு மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை நேரடியாக பார்வையிட்டு அறிந்து கொண்டனர்.

மேலும் மரங்கள் வண்ண விளக்குகளோடு எவ்வாறு காட்சிப் படுத்தப் படுகின்றன என்பதை நேரடியாக பார்வையிடப் பட்டது.

14.07.2023 அன்று சிங்கப்பூர் Jewel Changi பூங்காவினை பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் சிங்கப்பூரை சார்ந்த உயர் அலுவலர் பிரபாகர் உடன் இருந்தார்.

இதுபோன்ற முயற்சிகளின் மூலம் தமிழகத்தில் உள்ள பூங்காக்களை மேம்படுத்திட தேவையான திட்டங்களை உருவாக்கிட சிங்கப்பூர் அரசு முறைப் பயணம் மிகவும் உபயோகமாக அமைந்தது என்று வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

## வரலாற்று அடையாளம்!



மதுரையில் திறக்கப்பெறும்
கலைஞர் நூற்றாண்டு நூலகம்
கலைஞரின் மாட்சிக்கும்
தளபதியின் ஆட்சிக்கும்
வரலாற்று அடையாளமாகும்

தமிழச் சாதியை
அறிவுக் குடிமக்களாக்கி
இந்த ஏழு தளங்களும்
ஏழு கண்டங்களுக்கும்
இட்டுச்செல்க என்று
வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு கர்வப்படும்
காரணங்களுள்
இதுவும் ஒன்று

- கவிப்பேரரசு **வைரமுத்து**



### உத்திரகாண்ட் மாநிலம், டேராடூனில்

## அனைத்து மாநில சுகாதாரத்துறை அமைச்சர்களின் 15வது சுகாதார மாநாடு!

### ஒன்றிய அமைச்சரிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 14 கோரிக்கைகள் வழங்கினார்!

டேராடூன், ஜூலை 16- உத்திரகாண்ட் மாநிலம், டேராடூனில், ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவியா தலைமையில், "ஸ்வஸ்திய சிந்தன் ஷிவிர்" அனைத்து மாநில சுகாதாரத் துறை அமைச்சர்களுடன் 15வது சுகாதார மாநாட்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டார்

ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவியா அவர்களிடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.07.2023), உத்திரகாண்ட் மாநிலம், டேராடூனில் நடைபெற்ற, அனைத்து மாநில சுகாதாரத் துறை அமைச்சர்களுடனான, 15வது சுகாதார மாநாட்டில் கலந்து கொண்டு, தமிழ்நாடு அரசின் 14 கோரிக்கைகளை கொடுத்தார்.

அதன் விவரம் வருமாறு :

1. மருத்துவக் கல்வி சேர்க்கை கொள்கை மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்விற்கு (நீட்) எதிர்ப்பு

2. கோயம்புத்தூரில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்க அனுமதி கோருதல்

3. 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவுதல்

4. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் நிறுவுதல்

5. மருத்துவ பட்ட மேற்படிப்பு கல்வி வரைவு ஒழுங்குமுறை விதிகளுக்கு ஆட்சேபணை

6. சமீபத்தில் வெளியிடப்பட்ட மருத்துவ பட்டதாரி படிப்புகளுக்கான உத்தேச பொது கலந்தாய்வுக்கு ஆட்சேபணை

7. தேசிய மருத்துவ ஆணையத்தின் (மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களை நிறுவுதல், மதிப்பீடு மற்றும் மருத்துவக் கல்விக்கான இடங்களில் அதிகரிப்பு, 2023) வரைவுக்கு ஆட்சேபணை பொது மக்களின் கருத்துக்காக சமீபத்தில் வெளியிடப்பட்டது.

8. காலியாக உள்ள அனைத்து இந்திய எம்.பி.பி.எஸ் இடங்கள் மாநிலத்திற்கு ஒப்படைக்கப்படும்

9. 50 புதிய கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவுதல்

10. 50 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவுதல்

11. 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

12. 1000 புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் நிறுவுதல்

13. 1000 புதிய கிராமப்புற துணை சுகாதார நிலையங்கள் நிறுவுதல்

14. சென்னை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கூடுதலாக 100 படுக்கைகள் கொண்ட முக்கிய மருத்துவ சேவைக் கட்டிடம் நிறுவுதல்

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

### குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில்

## முதல்வரின் முகவரியில் பெறப்படும் மனுக்கள் மீதான ஆய்வுக் கூட்டம்!

### மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி தலைமையில் நடைபெற்றது

காஞ்சிபுரம், ஜூலை 16 - காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், முதலமைச்சர் அவர்களின் இணைய வழி சேவையான முதல்வரின் முகவரியில் பெறப்படும் மனுக்கள் மீது தரமான தீர்வுகள் அளிப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தலைமை யில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், நேற்று (15.07.2023) முதலமைச்சர் அவர்களின் இணைய வழி சேவையான முதல்வரின் முகவரியில் பெறப்படும் மனுக்கள் மீது தரமான தீர்வுகள் அளிப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தலைமை யில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் தனிப் பிரிவு மற்றும் முகாம மனுக்கள் அமைச்சர் அவர்களின் முகாம்கள் மனுக்கள் மற்றும் மக்கள் குறைதீர்க் கும் நாளில் பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்வது மற்றும் உரிய பதிலினை மனுதாரருக்கு தெரிவிப்பது தொடர்பாக விரிவான அறிவுரைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப் பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சா.செல்வகுமார், திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர், ஜா.சரவணகண்ணன், ஊரக வளர்ச்சி துறை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!




### அதிநவீன வசதிகளுடன்

## ஊட்டி சிறப்பு மலை ரயில்!

மேட்டுப்பாளையம், ஜூலை 16– கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இருந்து நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு மலை ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில் செல்லும் போது, பல்வேறு மலைகளை தாண்டி, குகைகளை தாண்டி, அருவிகள், நீர்வீழ்ச்சிகள், பசுமையான பள்ளத்தாக்குகள், இதமான சூழ்நிலை உள்ளிட்டவற்றை அனுபவிப்பதற்காக தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட உள்நாடுகளில் இருந்தும், பல்வேறு வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவது வழக்கம். மேலும், கடந்த 2005ம் ஆண்டு நீலகிரி மலை ரயிலுக்கு யுனெஸ்கோ அந்தஸ்து வழங்கப்பட்டது.

யுனெஸ்கோ அந்தஸ்து பெற்று தற்போது 18 ஆண்டுகள் நிறைவு பெற்று 19ம் ஆண்டில் இந்த நீலகிரி மலை ரயில் காலடி எடுத்து வைத்துள்ளது. சுற்றுலா பயணிகளின் கோரிக்கையை ஏற்று மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து ஊட்டிக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் சிறப்பு மலை ரயில் இயக்கப்படுகிறது. தற்போது இயக்கப்பட்டு வரும் சிறப்பு மலை ரயிலில் அதிநவீன வசதிகளுடன் சென்னை பெரம்பூர் இணைப்புப்பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகளுடன் இன்று முதல் இயக்கப்பட்டு வருகிறது.



சுதந்திர போராட்ட வீரர் தோழர்.சங்கரய்யா அவர்களின் 102வது பிறந்தநாளை யொட்டி குரோம்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், பகுதி செயலாளர்கள் த.ஜெயகுமார், இ.எஸ்.பெர்னாட் ஆகியோர் உள்ளனர்